போய்விட்டது. இது முறையாகக் காவல்துறைக்குப் போயிருக்க வேண்டும். மகாதேவியிலிருந்து ரெப்ரசண்டேஷன் வந்திருக்கிறது, முதல்வரைப் பார்ப்பதற்காக சைக்கிளில் ஒருவர் வந்து, பாவம் அவரைப் பார்க்க முடியாமல் அவர் டாக்டர் கலைஞர் அவர்களைப் பார்த்துக் கோரிக்கையைச் சொல்லிவிட்டுச் சென்றார். ஆகவே இந்தக் குறை இல்லை என்று....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொன்னதற்குப் பிறகு வேறு ஏதாவது ஆதாரங்கள் இருந்தால் கொடுக்கலாம், முதலிலேயே இவ்வளவு பெரிய கேள்வியாகப் போடுகிறீர்களே.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள், காவல்துறைக்குச் செல்ல வேண்டிய கேள்வி அரிசன நலத்துறைக்கு எப்படி வந்தது என்று கேட்டார்கள். இந்தத் துறை தனி காவல் படையை நிறுவி அதைக் கண்காணித்துக்கொண்டிருக்கிறது. அந்தக் காவல்படை இதுபோன்ற குற்றங்களை விசாரிக்கின்ற பொறுப்பில் இருக்கிறது. ஆகவேதான் அரிசன நலத்துறைக்கு இந்தக் கேள்வி வந்திருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

* வினா எண் 289—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதியில் உள்ள கான்சாபுரம், கூமாபட்டி, கட்டயதேவன்பட்டி, குன்னூர், ஊாடனேரி, நத்தம்பட்டி ஆகிய கிராமங்களில் உள்ள உணவு விடுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று தனியாக பிளேட் கொடுத்து உணவு விடுதிக்கு வெளியே இருந்து உணவு அருந்தச் செய்வது அரசு கவனத்துக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே நமது அரிஜன நலத்துறை அமைச்சரவர்கள் இந்தப் பதிலைச் சொல்வது எனக்கு ரொம்ப வேதனையைத் தருகிறது. அதாவது, முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது போல் இருக்கிறது. இந்தத் தீண்டாமை நடந்து கொண்டுதான் இருக்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உயர் சாதிக்காரர்களிடமிருந்து கையெழுத்து வாங்கிக் கொண்டு பொய் ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, அமைச்சரவர்கள் ப்ரோகிராம் இல்லாமல், மாறுவேடம் போட்டு வந்தால் நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். அதற்கு அமைச்சரவர்கள் தயாரா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு, பெ. சௌந்தரபாண்டியன் ; தலைவரவர்களே, எனக்கு வந்த பதிலைத்தான் நான் தருகிறேன், அமைச்சர் சென்னையிலேயிருந்து அவருடைய ஊருக்குச் சென்று மாறுவேடம் போட்டு போவதைவிட. தீண்டாமை என்ற பேயை அவர் பூசாரி வேடம் போட்டு விரட்டலாம்.

திரு, கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, திரு. தாமரைக்கனி அவர்கள் சொன்னதைப் போல், இந்தப் பதில் வருத்தத்தைத்தான் அளிக்கிறது. ஆகவே, நாங்களும் அமைச்சரவர்களை வேண்டிக்கொள்கிறோம். அமைச்சரவர்கள் திடீரென்று குறிப்பிட்ட இடங்களைப் பார்த்து அப்படியிருந்தால் தகவல் தந்த அதிகாரிகள் மேல் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதை வைத்து இரகசியப் புலன் விசாரணை செய்து அதிகாரிகள் அனுப்பிய பதில் தவறாக இருக்குமேயானால் கடுமையான நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுக்கும்,

(திரு. என். பழனிவேல் எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி திருவில்லிப்புத்தூர் தொகுதி சம்பந்தப்பட்டது, அடுத்த வினா எண், 290 .

(திரு. என். பழனிவேல், திரு. செ. சிவசாமி, திரு. பொ. உத்திராபதி ஆகியோர் எழுந்தனர்)

1979 மார்ச் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்; நீங்கள் எல்லோரும் தயவு செய்து உட்காருங்கள்.

திரு. என். பழனிவேல் : இந்தக் கேள்விக்கு இரண்டு நிமிடங்கள் தான் எடுத்துக் கொண்டீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் நேரத்தைப் பாருங்கள். திரு, பழனிவேல் அவாகள் தயவு செய்து உட்கார வேண்டும். திரு. சிவசாமி அவர்களும் உட்கார வேண்டும். நான் எல்லோருக்கும் பரவலாகக் கொடுத்துக்கொண்டு வருகிறேன். இன்னும் பத்து கேள்விகள் இருக்கின்றன, நேரமோ இன்னும் ஐந்து நிமிடங்கள் தான் இருக்கிறது. எனவே, நீங்களே, முதல் வரிசையில் இருப்பவர்கள் முடிவு செய்து பிறநேரத்தை இரண்டு மணி என்று ஒதுக்கினால் நான் அலாட் செய்கிறேன். ஆனால் மறுபடியும் பேசும்பொழுது, இன்னும் பத்து நிமிடம், இன்னும் ஐந்து நிமிடம் தாருங்கள் என்று அதையும் கேட்கிறீர்கள். இதை வைத்துக் கொண்டு ஒரு மணிக்குள் எப்படி முடிப்பது என்று தெரியவில்லை. திரு. பழனிவேல் அவர்கள் என்னுடைய கவனத் திற்கு வரவில்லை, ஆகவே, அடுத்த கேள்விக்குப் போய் விட்டேன். அப்படி நான் போனால் கூட அதுபற்றி குறுக்குக் கேள்வி கேட்கக்கூடாது. அதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். அதைப்பற்றி என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாமே தவிர கட்டாயப்படுத்திக் கேட்க முடியாது. அப்படியிருந்தால் குறிப்பிட்ட நேரத்திற்குள் எல்லாவற்றையும் அடக்க முடியாது. திரு. வி. கே. கோதண்டராமனைப் போல் துணைக் கேள்விக்கு ஐந்து நிமிடங்கள் எடுத்துக் கொண்டால் என்ன செய்வது? ஆகவே, உறுப்பினரவர்கள் உட்கார வேண்டும்.

திரு. செ. சிவசாமி : எங்கள் மாவட்டம்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் மாவட்டம் என்றாலும், திரு. சிவசாமி, முடிந்தவரையில் தான் கொடுப்பேன். கொடுக்க வேண்டுமென்று கட்டாயம் இல்லை. சில பிரச்சினைகள் வரும் போது அப்பொழுது நேரம் ரொம்பக் கொடுத்திருக்கலாம். இப்பொழுது இல்லையென்பதால் கேள்வி கேட்காதீர்கள். அடுத்து வினா எண். 290...... (குறுக்கீடு) 1 மணி நேரத்திற்குள் முடிக்க வேண்டும். 10 மணி முடிந்த பிறகு அச்சடித்து வைக்கப் போகிறேன். (திரு. கிட்டப்பா எழுந்து நின்றார்) திரு. கிட்டப்பா தாங்கள் பேசுவதைக் குறைத்துக் கொண்டால் கேள்வி நேரத்தை 1/2 மணி நேரம் நீட்டிக்கிறேன் (கூச்சல்—குழப்பம்).

திரு. என். பழனிவேல் : கேள்வி நேரத்தை நீட்டுவதே இல்லையா ?.... (கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து இப்படி வற்புறுத்தி கேட்பது என்றால் முடியாது. அவையினுடைய கவுரவத்தை, கண்ணியத்தை, பெருமையைக் காப்பாற்ற வேண்டுமென்றால், நீங்கள் இப்படிக் கேட்க முடியாது. அப்படிக்கட்டாயப் படுத்துபவர்களை நான் அழைக்கவும் முடியாது. நீங்கள் 1 மணி நேரம் மேலும் எடுத்துக் கொள்ளுங்கள், நான் வேண்டாமென்று சொல்லவில்லை. முன் வரிசையில் இருப்பவர்கள் முடிவெடுக்கட்டும், எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

குலசேகரப்பட்டினம் துறைமுகம்.

*வினா எண் 290—திரு. சின்ன சேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

குலசேகரப்பட்டினம் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய அரசு எடுத்துள்ள முயற்சிகள் யாவை ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :—திருச்செந்தூர் தாலுக்காவில் உள்ள குலசேகரப்பட்டினம் துறைமுகம் 1972 ஆம் ஆண்டில் மூடப்பட்டு விட்டது. அத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கான குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவரவர்களே, இந்தக் குலசேகரப்பட்டினம் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யக் கோரி பல முறை இன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சர் கூட கேள்வி எழுப்பியிருக்கிறார். அங்கே இருக்கிற பொது மக்களும் இந்தத் துறைமுகம் திறக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். எனவே, அரசு இதை மறு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு இந்தத் துறை முகத்தில் எந்தவித போக்கு வரத்தும் இல்லாத நிலை தொடர்ந்து இருந்து வருகிற காரணத்தால், 1970 ஆம் ஆண்டு சுங்க இலாகா அதை மூடலாம் எனக் கருத்து தெரிவித்து, 1972 ஆம் ஆண்டு அது மூடப்பட்டது. அப்பகுதிக்கு அருகிலே இருக்கிற தூத்துக்குடி துறைமுகம் பெரிய துறைமுகமாக வளர்ச்சி அடைந்து வருகிற காரணத்தால் இத்துறைமுகத்தை மீண்டும் திறப்பதற்குரிய வாய்ப்பில்லை.